IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 20/2018

Deposition of Witness : PW 1

Name : அங்கம்மாள் (வயது – 60)

Father's Name /W/o : க/பெ தானமய்யா

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : அரக்கோணம்

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 06.08.2025.

## குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. தாவா சொத்து ரயில்வேக்கு சொந்தம் என்றால் சரிதான். வழக்கு சொத்து எனக்கு மட்டும் தான் சொந்தம் என்று பிரமாண பத்திரத்தில் தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல நான் அனுபவித்து வருகிற இடம் மட்டும் என்க்கு சொந்தம். என் தாயார் இருக்கும்போது பிரதிவாதி அவர்களுடன் பிரச்சினை செய்துள்ளார்கள் என்று என் பிரமாண பத்திரத்தில் தெரிவித்துள்ளேன் என்றாலும் என்ன பிரச்சினை செய்தார்கள் என்றால் வீடு கட்டவிடாமல் பிரச்சினை செய்தார்கள்.

2. அசல் வழக்கு எண்.216/1998 என் தாயார் யார் மீது தாக்கல் செய்தார் என்றால் பிரதிவாதி மீது தாக்கல் செய்தார். மேற்படி வழக்கை என் தாயார் வாபஸ் வாங்கினார் என்றால் சரிதான். பஞ்சாயத்தில் என்ன பேசினார்கள் என்றால் பொது வழிக்கு 3 அடி பிரதிவாதிக்கு விட்டு கொடுக்கும்படி சொன்னார்கள். அதன்படி நான் 3 அடி பிரதிவாதிக்கு விட்டு கொடுத்தேன் என்றால் சரிதான்.

3. மேற்படி 3 அடி விட்டு கொடுத்ததற்கு எழுதி வாங்கினேனா என்றால் இல்லை. ஆனால் அவர்கள் கல் வைத்து விட்டார்கள். மேற்படி கல் யார் வைத்தார்கள் என்றால் பிரபுதாஸ் வைத்தார். 1992 ஆம் ஆண்டிற்கு பிறகு யார் கல் எடுத்தார்கள் என்றால் கல் வைத்து ஆறு மாதத்திற்கு பிறகு எடுத்துவிட்டார்கள். அதன் பிறகு 2018 ஆம் ஆண்டில் நான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1992 ஆண்டில் கல் எடுத்தற்கு பிறகு பிரதிவாதி அவர் இடத்தில் வீடு கட்டியுள்ளார்கள் என்றால் சரிதான்.

4. என் அனுமதி இல்லாமல் வழியில் இரும்பு கேட் போட்டார் என்று என் பிரமாண பத்திர்த்தில் தெரிவித்துள்ளேன் என்றாலும் எந்த வருடத்தில் இரும்பு கேட் போட்டார் என்றால் ஞாபகமில்லை. இரும்பு கேட் எந்த இடத்தில் போட்டார் என்றால் நான் விட்டு கொடுத்த 3 அடி மற்றும் என் இடத்தில் 5 அடியில் போட்டுள்ளார்கள். மேற்படி இரும்பு கேட் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு அல்லது பின்பு போட்டார்களா என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு 4 வருடத்திற்கு முன்பு போட்டார்கள். ஆனால் 2018 ஆம் ஆண்டில் தான் பிரதிவாதி பிரச்சினை செய்ததாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். சுப்பி என்பவர் என் தாயார் என்றால் சரிதான்.

5. 1986 ஆம் ஆண்டு தொழில் வரி கட்டியதாக நான் ரசீது (வா.சா.ஆ – 1 ) தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என் தாயார் என்ன வேலை செய்தார்கள் என்றால் முனிசிபாலிட்டியில் வேலை செய்தார். வியபாரம் எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். என் தாயார் முனிசிபாலிட்டியில் வேலை செய்யும்போது மேற்படி ரசீதை (வா.சா.ஆ – 1 )வாங்கியுள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ – 2 சுப்பம்மாள் என்று என் தாயார் பெயர் போட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ – 2 03.09.1987 தேதியில் அரக்கோணம் வட்டாட்சியர் என் தாயார் வசித்து வந்த இடத்தை காலி செய்ய வேண்டுமென்று பிரிவு 7 இன் கீழ் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்புக்கு வட்டாட்சியருக்கு பதில் அனுப்பினேனா என்றால் இல்லை.

6. வா.சா.ஆ – 4 தேர்தல் அட்டையில் ஆதிதிராவிடர் காலணி என்று உள்ளது என்றால் சரிதான் அப்போது அப்படிதான் இருந்தது. நான் எங்கு வேலை செய்கிறேன் என்றால் முனிசிபாலிட்டியில் வேலை செய்கிறேன். என் தாயார் எந்த வருடத்தில் இறந்தார் என்றால் 2017 ஆம் ஆண்டில் இறந்தார். என் தாயார் கைரேகை அல்லது கையெழுத்து போடுவாரா என்றால் கைரேகை தான் வைப்பார். வா.சா.ஆ – 9 வீட்டு வாடகை ஒப்பந்தம் 12.02.2015 தேதியில் நான் சீனிவாசன் என்பவருக்கு வாடகைக்கு விட்டேன் என்றாலும் அவர் வாடகைக்கு எத்தனை வருடம் வாடகைக்கு இருந்தார் என்றால் 2 வருடம்.

7. வா.சா.ஆ – 10 புகைப்படங்கள் எப்போது எடுத்தது என்றால் ஞாபகமில்லை. மேற்படி புகைப்படம் யார் எடுத்தது என்றால் என் மகன் எடுத்தது. மேற்படி புகைப்படம் எடுத்தற்கு ரசீது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் ரசீது வாங்கவில்லை. வா.சா.ஆ – 11,12 என் தாயார் பெயரில் தொழில் வரி ரசீது என்று தெரிவித்துள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்தை நீதிமன்ற ஆணையர் மற்றும் டவுன் சர்வேயர் மூலம் சொத்தை அளந்தார்கள் என்றால் இல்லை பிரதிவாதிகள் அளக்கவிடவில்லை. மேற்படி இரு தரப்பு வழக்கறிஞர்கள் வந்தார்களா என்றால் சரிதான்.

8. டவுன் சர்வேயர் வரைபடத்தை பார்த்து நான் குறிப்பிட்டுள்ள சர்வே எண் இல்லை என்றும் வழக்கு சொத்தை ரயில்வேக்கு சொந்தம் என்றும் அளக்க முடியாது என்று அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி பிரதிவாதிகள் அளக்கவிடவில்லை என்று மனு ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. நான் வழக்கறிஞர் ஆணையர் அறிவிப்பை படித்து பார்த்தேனா என்றால் இல்லை. 2 ஆவதாக வழக்கு சொத்தை அளக்க வேண்டும் என்று நான் மனு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. வழக்கறிஞர் ஆணையர் அறிக்கைக்கு நான் மறுப்பு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

9. நான் மற்றும் பிரதிவாதி வசிக்கும் இடங்கள் ரயில்வேக்கு சொந்தமானது என்றாலும் தாவா சொத்தில் எந்த வித உரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல. எனவே தாவா சொத்தில் எவ்வித பரிகாரங்களும் கோரமுடியாது என்று எனவே தாவாவை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. தாவாவில் தாக்கல் செய்த வரைபடம் நான் சுயமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. தாவாவில் குறிப்பிட்டுள்ள சர்வே எண்ணுக்கும் வழக்கு சொத்துக்கும் எவ்வித சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.